

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | பிப்ரவரி 16, 2017 | புரட்சி 16 | முழக்கம் 05 | விலை: ரூ.3.00

## கழக சார்பில் ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருது

# மேட்டூரில் களைகட்டிய காதலர் நாள்






காதலர் நாளை முன்னிட்டு ஜாதி மறுப்பு திருமணம் செய்த இணையர்களுக்கும், ஜாதி மறுப்புத் திருமணப் போராட்டக் களத்தில் பங்கு பெற்ற தோழர்களுக்கும் விருதுகள் வழங்கும் விழா மேட்டூரில் எழுச்சி உற்சாகத்துடன் நடைபெற்றது. மேட்டூர் அணை பாப்பம்மாள் திருமண மண்டபத்தில் திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி 12.2.2017 அன்று காலை 10 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை கலை நிகழ்வுகளுடன் நடந்தது.

கலை கருத்தரங்கில் ஜாதி மறுப்பு - மத மறுப்பு இணையர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். நண்பகல் 12 மணி முதல் ஒரு மணி வரை ஜாதி மறுப்பு மணம் புரிந்தோர் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள், சவால்கள் பற்றி விவாதித்தனர். மதிய உணவைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடந்தன.

பெண்ணுரிமை, ஜாதி ஒழிப்பு திரையிசைப் பாடல்களை டி.கே.ஆர். இசைக் குழுவினர் நிகழ்த்தினர். ஜாதி மறுப்பு திருமணம் செய்த பெண்களே பாடல்களைப் பாடியதும், நடனமாடியதும் நிகழ்வுக்கு பெருமை சேர்த்தது. இளைஞர்களின் பறை இசையும் நடனமும் அரங்கை குலுக்கின. மாலை 4 மணியளவில் விருதுகள், பாராட்டு வழங்கும் விழா தொடங்கியது. மேட்டூர் ஆர்.எஸ். கழகத் தோழர் அ.அனிதா வரவேற்புரையாற்ற, காவலாண்டியூர் கழகத் தோழர் கி.மணிமேகலை தலைமை தாங்கினார். ஜாதி ஆணவப் படுகொலைக்கு தனது கண் முன்னால் கணவர் சங்கரைப் பறிகொடுத்த உடுமலை கவுசல்யா, விழாவின் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். ஜாதி ஆணவப் படுகொலையையும், ஜாதி அமைப்பையும் எதிர்த்து தொடர்ந்து அழுத்தமாக குரல் கொடுத்து வரும் வீரப்பெண்ணாக கவுசல்யா உயர்ந்து நிற்கிறார்.

நிகழ்வில் பங்கேற்று அவர் பேசுகையில், “ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். அதுவே இப்போது முக்கியத் தேவை. திராவிடர் விடுதலைக் கழகம் ஜாதி மறுப்பு இணையர்களுக்காக குரல் கொடுத்து வருவது, நம்பிக்கை, மகிழ்ச்சியைத் தருகிறது” என்று குறிப்பிட்டார். தோழர்களுடன் சேர்ந்து கவுசல்யா நடனமாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று விருதுகளை வழங்கி உரையாற்றினார். ஜாதி மறுப்பு இணையர்களாக வாழ்க்கைத் தொடங்குவோர் அதை வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ்ந்து காட்டும் போதுதான் ஜாதி மறுப்புக் கொள்கைகள் வெற்றி பெறும். ஜாதி மறுப்பு இணையர் வாழ்வில் பெண்ணுரிமை பிரிக்க முடியாமல் இணைந்து நிற்பதை சுட்டிக்காட்டியதோடு வாழ்வியல் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு பெரியாரியம் ஒளி விளக்காகத் திகழ்வதை குறிப்பிட்டு உரையாற்றினார். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, இதேபோல் ஜாதி மறுப்பு இணையர்களுக்கான பாராட்டு விழா, ஈரோட்டில் நடந்த திட்டமிட்டு வருவதைக் குறிப்பிட்டார்.

ஜாதி மறுப்பு இணையர்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்கும் கிராமம் மேட்டூர் அருகே உள்ள காவலாண்டியூர். ஜாதி மறுப்பு இணையர்களை பல மாதங்கள், பல வாரங்கள் தங்க வைத்து உணவு வழங்கி, பாதுகாப்பு வழங்கி வரும் காவலாண்டியூரில் கழகத் தோழர்கள் இதுவரை 200க்கும் மேற்பட்ட ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்துள்ளனர். ஜாதி மறுப்பு இணையர்களுக்காக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்ததோடு ஜாதி வெறியர்களின் வன்முறைத் தாக்குல்களையும் எதிர்கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய அரும்பணியாற்றும் காவலாண்டியூர் கழக சார்பில் காவலாண்டியூர் கழகப் பொறுப்பாளர் ஈசுவரன் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். மேட்டூரில் ஜாதி மறுப்பு திருமணங்களை முன்னின்று நடத்துவதிலும், திருமணப் பதிவுக்கான ஆவணங்களைத் திரட்டி உதவுவதிலும் தொடர்ந்து களப்பணியாற்றி வரும் மேட்டூர் கழகத் தோழர் அண்ணாத்துரைக்கு பாராட்டும் விருதும் வழங்கப்பட்டது. கரூர் பகுதியில் ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வரும் த.பெ.தி.க. தோழர் தனபால் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.

திராவிடர் விடுதலைக் கழக சார்பில் இந்த நிகழ்வை தோழர்கள் குமரேசன், இரண்யா, பரத் ஆகியோர் முன்னின்று ஒருங்கிணைத்தனர். தோழர் ப. இனியா நன்றி கூறினார்.

## துணைவர்களை பறிகொடுத்த நிலையிலும் கொள்கைக்காகப் போராடும் தோழியர்கள்

*மேட்டூர் விழாவில் ஜாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதற்காக துணையை இழந்த நிலையிலும் தனித்து நின்று ஜாதி ஒழிப்புக்காக தீரத்துடன் குரல் கொடுக்கும் நான்கு பெண்களுக்கு பாராட்டு விருது வழங்கப்பட்டது. உடுமலை கவுசல்யா, ஈரோடு சுகுணா, பவானி சாகர் கோமதி, இராசிபுரம் மலர் ஆகிய நான்கு தோழியர்களும் நிகழ்வில் பங்கேற்று விருதுகளைப் பெற்றனர்.*

**உடுமலை கவுசல்யா:** ஜாதி எதிர்ப்புக் குறியீடாக தமிழகத்தில் பேசப்படும் பெயர் உடுமலை கவுசல்யா. தலித் இளைஞரை திருமணம் செய்து கொண்ட காரணத்துக்காக பட்டப்பகலில் கண்ணெதிரே ஜாதி வெறியர்கள் படுகொலைக்கு துணைவரை பறி கொடுத்தவர். பெற்றோர்களின் ஜாதி வெறிக்கு எதிராக துணைவரை இழந்த நிலையிலும் துணைவர் இல்லத்திலேயே வாழ்வேன் என்று வாழ்ந்து காட்டி வருபவர்.

**ஈரோடு சுகுணா :** ஈரோடு மாவட்டம் சென்னிமலை பகுதியைச் சார்ந்த தோழர் இராஜாகண்ணு என்பவரை காதல் மணம் புரிந்த சுகுணா, மேட்டூர் கழகத் தோழர்களால் 1999ஆம் ஆண்டு திருமணம் செய்து வைக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து இருவரும் கழகத்தில் இணைந்து செயல்பட முடிவு செய்தனர். மேட்டூரில் வசித்து வந்த இந்த இணையர்களுக்கு மேட்டூர் கழகத் தோழர்கள் உதவி செய்து வந்தனர். அதில் ஒன்று, இராஜாகண்ணுக்கு காவல்துறையில் பணியமர்த்தியது. இதைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டு ஒரு விபத்தில் எதிர்பாராத விதமாக இராஜாகண்ணு உயிர் இழக்க நேரிட்டது. அதோடு, தன் குடும்பத்தோடு முடங்கிவிடாமல் தொடர்ந்து கழகம் நடத்திய பல்வேறு போராட்டம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம் என பல்வேறு நிகழ்வுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருபவர் சுகுணா.

**இராசிபுரம் மலர்:** மதுரையைச் சேர்ந்த மலர், 5 ஆண்டுகளுக்கு முன்பு தன் காதல் திருமணத்திற்கு வீட்டில் எதிர்ப்பு ஏற்பட்டதன்காரணமாக தற்கொலை முயற்சியில் (தீக்குளிப்பு) ஈடுபட்டு தீக்காயங்களுடன் உயிர் தப்பினார். அதன் பிறகு தான் காதலித்த நபரையே மணந்து ஓராண்டு காலம் குடும்பம் நடத்தினார். ஒரு ஆண் குழந்தையும் பெற்றெடுத்தார். அதன் பிறகு, தீக்காயங்களுடன் இருந்த அவருடைய தோற்றத்தைக் கண்ட காதலன் இவரை வெறுக்கத் தொடங்கினார். மலரை விட்டு பிரிந்து சென்று விட்டார். மனமுடைந்த மலர், வேறு எங்கு செல்வது என்று தெரியாமல், தன் சகோதரியின் இல்லத்தில் மூன்றரை ஆண்டுகளாக இருந்து வருகிறார். வீட்டை விட்டு வெளியே வராமல், சமூக வலைதளங்களில் பெண் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். இதனை அறிந்த கழகத் தோழர்கள் குமரேசன், இரண்யா ஆகியோர், மலரை இராசிபுரத்தில் அவரது சகோதரியின் இல்லத்தில் நேரில் சந்தித்துப் பேசி மேட்டூர் விழா நிகழ்வில் முதல் முறையாக பங்கேற்க அழைத்தனர். கழகத் தோழர்களின் அணுகுமுறை, கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட தோழர் மலர், கழகத்தில் இணைந்து செயல்பட முன் வந்துள்ளார்.

**பவானிசாகர் கோமதி :** சுமார் 23 ஆண்டுகளுக்கு முன்பு தன் குடும்பத்தை எதிர்த்து காதல் மணம் செய்து கொண்ட கோமதி, கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு தன் இணையரை இழந்தார். பள்ளி பருவத்தில் பெரியாரிய சிந்தனையை வளர்த்துக் கொண்ட கோமதி, மனதளவில் மட்டுமே பெரியாரியல் சிந்தனையுடன் இருந்தார். வெளிப்படையாக செயல்படாத நிலையில் தன் வாழ்வை நகர்த்தினார். குடிகார கணவரின் கொடுமைகளுக்கு ஆட்பட்ட இவர், தன் கணவரின் மறைவிற்குப் பிறகு கடந்த ஆண்டு கழகத்தின் சார்பாக நடைபெற்ற அச்சம் போக்கும் அறிவியல் பரப்புரைக் குழு, பள்ளிப்பாளையம் வந்தபோது நிகழ்வில் தாமாகவே ஆர்வத்துடன் பங்கேற்றார். தொடர்ந்து மகளிர் சந்திப்பு, பல்வேறு பொது நிகழ்வுகள், கழக நிகழ்வுகள் என பங்கேற்று வருகிறார். தனது மகன் பிரபாகரனையும் அமைப்பில் இணைத்து களப்பணியாற்ற வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேட்டூர் விழாவில் இந்த வீரப் பெண்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விருதுகளை வழங்கினர்.

# அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதம்

# ஆளுநர்கள் மய்ய அரசின் கங்காணிகள்

*தமிழ்நாட்டில் இப்போது ஆளுநராக இருப்பவர் செயல்பாடு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. அரசியல் நிர்ணய சபையில் ஆளுநர் பதவி குறித்து கடும் விவாதங்கள் நடந்துள்ளன. முரசொலி மாறன் எழுதிய 'மாநில சுயாட்சி' நூலிலிருந்து சில பகுதிகள்:*

கவர்னரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். குடியரசுத் தலைவர் நியமிக்கிறார் என்றால் பிரதமர் நியமிக்கிறார் என்று பொருள்.

பிரதமர் நியமிக்கிறார் என்றால் மத்திய அரசை ஆளுகின்ற கட்சி அப்படி முடிவு எடுக்கிறது என்று பொருள்.

அரசியல் நிர்ணய சபை எடுத்த எடுப்பிலேயே இந்த முடிவுக்கு வந்து விடவில்லை. பலவித முடிவுகளை அலசி ஆராய்ந்து, இறுதியில் இப்படி நியமனம் செய்யும் முடிவுக்கு வந்தது.

அவற்றையெல்லாம் ஆராய்ந்தால், கவர்னர் பதவியை நியமனப் பதவியாக்கியதன் உள்நோக்கம் நன்கு புலப்படும்.

அரசியல் நிர்ணய சபையின் துவக்கக் காலத்தில், வயது வந்தோருக்கு வாக்குரிமை என்கிற அடிப்படையில் மாநிலத்து வாக்காளர்கள் அனைவரும் பெரும்பான்மை வாக்குகளால் அந்த மாநிலத்து கவர்னரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவு செய்தார்கள்.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட கவர்னரிடம் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தில் உள்ளதுபோல, உசிதம் போல் அமைச்சரவையின் ஆலோசனைகளைக் கேட்காமல் செயலாற்றுகிற அதிகாரங்களையும் (Discretionary powers), சட்டசபையைக் கலக்காமல் பயன்படுத்தக்கூடிய சிறப்பு அதிகாரங்களையும் (Special powers) ஒப்படைக்கலாம் என்றும் அப்போது கருதப்பட்டது.

- ஆனால், இந்தக் கருத்தினைப் பின் ஏன் மாற்றிக் கொண்டார்கள்?

பண்டித நேரு 1949, மே 31ஆம் நாளன்று அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது, இதற்கான காரணங்களை விளக்கியிருக்கிறார்.

ஆனால், உண்மை இதுதான்; ஒரு மாநிலத்து கவர்னரை அந்த மாநிலத்து மக்களே தேர்ந்தெடுப்பதாக இருந்தால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர்தாம் கவர்னர் ஆக முடியும். எனவே, மாநிலத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் கவர்னர் வலிமை மிகுந்த ஜாம்பவனாக - மத்திய அரசுக்குக் கட்டுப்படாமல், மத்திய அரசையே கேள்வி கேட்க முனைந்தால் என்ன செய்வது என்கிற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. எனவேதான், மத்திய அரசின் பிடியைப் பலப்படுத்திக் கொள்ள கவர்னரைத் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்று முடிவு செய்தார்கள்.

ஆனால், பண்டித நேரு நேரடியாக இந்தக் காரணத்தைக் கூறவில்லை. 'மாகாணப் பிரிவினை உணர்ச்சிகளும், குறுகிய, மாகாண ரீதியான எண்ணங்களும், செயலும் ஊக்கப்படுத்தப்படும்' என்று பண்டித நேரு சுற்றி வளைத்துக் கூறினார்.

**டாக்டர் பி.எஸ்.தேஷ்முக் இன்னொரு சூழ்நிலையைப் பயங்கரமாகப் படம் பிடித்துக் காட்டினார்: "மாநிலத்தில் உள்ள மிக முக்கிய மனிதர்களான கவர்னரும், முதலமைச்சரும் எல்லாவற்றிலும் ஒத்துப் போவதாக இருந்து, மத்திய அரசை எதிர்ப்பதிலும் அவர்கள் ஒத்துப் போய் விட்டால் என்ன செய்வது? மத்திய அரசு சொல்கிற கருத்துரைகளையும், பிறப்பிக்கிற கட்டளை களையும் அந்த மாநில அரசு கேட்கா விட்டால், மத்திய அரசு அந்த மாநிலத்தின் மீது படையெடுத்துச் செல்லுமா?"**

- இவ்வாறு அவர் கேட்டார்.

கவர்னர் பதவிக்குத் தேர்தல் நடத்தினால், அதன் காரணமாகப் பணச்செலவு ஏற்படும் என்பதும் ஒரு காரணமாகக் காட்டப்பட்டது.

இந்த முறை அமுலுக்கு வந்தால் கவர்னர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். முதலமைச்சரோ முதலில் ஒரு தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியாக கவர்னரால் முதலமைச்சராக நியமிக்கப்படுகிறவர். ஆனால், கவர்னருக்கோ 'நான்தான் நேரடியாக மாநில மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவன்' என்கிற உணர்ச்சி இயற்கையாகவே ஏற்படும். இப்படி இரு பதவிகளில் இருப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாக ஆகி விட்டால் அதிகாரத்தைப் பயன்படுத்தும் விஷயங்களில் இருவருக்கும் மோதல் ஏற்படும் என்கிற காரணமும் மறுபரிசீலனைக்கான காரணங்களில் ஒன்றாகும்.

தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுத்தால் கவர்னருக்கும், முதலமைச்சருக்கும் மோதல் ஏற்படும் என்கிற வாதத்தை டாக்டர் அம்பேத்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. கவர்னர் தேர்தல் தனி மனிதரின் செல்வாக்கின் அடிப்படையில் -- இவர் இந்தப் பதவிக்கு ஏற்றவரா ? அதற்கேற்ற கல்வியறிவும், குணமும் இவரிடம் இருக்கின்றனவா? என்கிற பரிசீலனைக்கு உட்பட்டு நடக்கும். ஆனால், முதலமைச்சர் தேர்தலோ, இவருடைய திட்டம் ஒத்து வருமா? சரியானதா? என்கிற அடிப்படையில் அமையும். எனவே, தேர்ந்தெடுக்கப்படுவதன் காரணமாக இருவருக்கும் மோதல் ஏற்படக்கூடும் என்பதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால், 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி (பிரிட்டிஷ் ஆட்சியில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட சட்டம்-ஆர்) கவர்னருக்குத் தரப்பட்ட சிறப்பு அதிகாரங்கள் அனைத்தையும் தம் உசிதம்போல் பணியாற்றும் அதிகாரங்களில் பலவற்றையும் நீக்கி விட்டு, அமைச்சரவையின் பரிந்துரையின்படியே கவர்னர் பெரும்பாலும் பணியாற்ற வேண்டும் - என்று அமைத்துவிட்டதால், அத்தகைய பதவிக்கு ஏராளமான பணம், நேரம், உழைப்பு ஆகியவற்றைச் செலவிடும் தேர்தல் வேண்டுமா என்கிற கேள்வி பிறந்ததாகவும், முன்புபோல் அப்பதவிக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்பதை உணர்ந்தவர்கள் எவரும் கவர்னர் தேர்தலில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்றும்; அதனால்தான் தேர்ந்தெடுக்கிற முடிவைக் கைவிட்டதாகவும் டாக்டர் அம்பேத்கர் கூறினார்.

அரசியல் சட்டத்தை எழுதிய 'நகல் வரைவுக் கமிட்டி' (Drafting Committee) மேலும் இரு யோசனைகளை முன் வைத்தது.

**முதல் யோசனை:** முதலமைச்சர் போல கவர்னரை அந்தந்த மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுப்பது.

- இது இரண்டு முதலமைச்சர்களை உருவாக்குவதற்குச் சமம் என்று கருதி இந்த யோசனை கைவிடப்பட்டது.

**இரண்டாவது யோசனை :** கவர்னர் பதவிக்கான வேட்பாளர் களைப் பட்டியலாகத் தயாரித்து, இந்தப் பட்டியலில் காணும் ஒருவரைக் குடியரசுத் தலைவர் கவர்னராக நியமிக்கலாம் என்று சட்டமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக் குடியரசுத் தலைவருக்கு அனுப்புவது; பிறகு குடியரசுத் தலைவர் அந்தப் பட்டியலிலிருந்து ஒருவரை கவர்னராக நியமிப்பார்.

இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் மாநிலத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அல்லது பெரும்பான்மை பெற்றிருக்கக்கூடிய கட்சியின் ஆதரவைப் பெற்றவர்கள் தாம் கவர்னராக வரமுடியும்.

பிறகு கவர்னருக்கும், மாநிலச் சட்டமன்றத்திற்கும் தொடர்பு ஏற்பட்டு விடும்; அதன் பின்னர் மத்திய அரசு விரும்புவதுபோல் காரியங்கள் நடக்காமல் போய்விடக்கூடும் - என்கிற உள்நோக்கத்தாலேயே இந்த யோசனையும் கைவிடப்பட்டது.

இறுதியாகத்தான், கவர்னர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார் என்கிற திருத்தத்தைப் பிரஜேஸ்வர் பிரசாத் என்பவர் கொண்டு வந்தார்.

**"மத்திய அரசின் அதிகாரம் எல்லா மாகாணங்களிலும் நிலை நாட்டப்பட வேண்டியது அவசியம்"**

- என்பதையே அந்தத் திருத்தத்திற்குக் காரணமாகக் காட்டினார்.

**"இந்த நாட்டின் நடுத்தர வர்க்கத்து அறிவாளிகளிடையே படைக்கும் சக்தி இல்லாமல் போய்விட்டது. தாமாகவே முயற்சி மேற்கொள்ளும் போக்கு அவர்களை விட்டு நீங்கி விட்டது. இந்த மண்ணை ஆளவேண்டிய மக்கள் எல்லா வழிகளிலும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், சுரண்டப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த மாதிரியான சூழ்நிலையில் மாகாண நிர்வாகத்தைத் தன் கையில் வைத்திருப்பதைத் தவிர இந்தியப் பேரரசுக்கு வேறு வழி இல்லை."**

- என்று பிரஜேஷ்வர் பிரசாத் கூறினார்.

சர்வ வல்லமை பெற்ற ஞான பண்டிதர்கள் ஏதோ மத்திய அரசில்தான் நிலையாகக் குடியேறியிருப்பது போலவும்; மாநிலங்களில் ஏதோ மக்களுடைய வாக்குகளைத் தவறிப் பெற்றுவிடுகிற தான்தோன்றிகளே இருப்பது போலவும். ஒரு நினைப்பு எப்படி அப்போது நீக்கமற அரசியல் நிர்ணய சபையில் நிறைந்திருந்தது என்பதற்கு இப்பேச்சு ஒரு சான்று!

அடுத்துப் பேசிய காங்கிரஸ் கட்சியின் முன்னணி உறுப்பினர் மகாவீர் தியாகி நிலைமையைத் தெளிவாக்கினார்.

**"நாம் இப்போது சுயாட்சி கொண்ட மாநிலங்களை உருவாக்குவது என்கிற நமது பழைய கருத்தைக் கைவிட்டு விட்டு, மத்தியிலே அதிகாரங்கள் அனைத்தையும் குவித்து, இப்போது நியமன கவர்னர்களையும் பெறப் போகிறோம்"**

- என்று மிகவும் திருப்தியோடு மகாவீர் தியாகி கவர்னர் பதவி ஏன் நியமனப் பதவியாக்கப்பட்டது என்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்.


அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று,

**"மத்திய அரசின் கொள்கையை வற்புறுத்தி, அதைப் பாதுகாக்கிற ஏஜெண்டாக அல்லது ஏஜென்சியாக இருக்கிறவர்தாம் கவர்னர்"**

என்று கூறி முழு அந்தரங்கத்தையும் வெளியிட்டார்.

ஆம்; மாநில அமைச்சரவை மீதும், அத்தகைய அமைச்சரவையை உருவாக்குகிற மாநிலத்து மக்கள் மீதும் சிறிதும் நம்பிக்கை வைக்காமல்; அவர்களைக் கண்காணிப்பதற்கு மத்திய அரசால் நியமிக்கப்படும் 'கங்காணி' தான் கவர்னர்! ●

## கற்றுக் கொள் - பறவை, விலங்குகளிடம்...



காதல்
அருகைப் போல் முடிவற்றத்
தாவரம்.
காதல்
உயிர்களின் நியதி.
அணுக்கமும்..இணக்கமும்
புரிதலும்..உறுதியும் சமைந்த உணர்வு.

பறவைகளையும், விலங்கையும்போல்
காதலைக் கொண்டாடக்
கற்றுக் கொள்ள வேண்டும்
மனித இனம்.

ஏனெனில்,

பறவை தத்தம் குஞ்சுகள்
இணை தேடுகையில் ..
தலை அறுத்து ..
தண்டவாள ஓரம் எறிவதில்லை.!

மிருகங்கள் தன்
குட்டியின் காதலுக்கெதிராய்..
கும்பலாய் சென்று
ஊர் எரிப்பதில்லை.
படுகொலைகள் புரிந்து ..
ஜாதீயத் திமிரோடு சவங்களை
வீசிவிட்டு வருவதில்லை.!

ஜாதி மதங்களை ஒழிக்கும்
உபாயங்களில்,
காதலின் பணி உன்னதமானது.

காதல் புரிவோரே!

பூக்களும்
மினுமினுப்புத் தாள் சுற்றிய
பரிசுப் பொருள்தாண்டி..
நேசத்தையும், பரிவையும்
கொள்கையும், முற்போக்கையும்
பகிருங்கள்.!
ரத்தவெறி கொண்டு அலைகிற
ஜாதி, மதவெறி சக்திகளை
வெட்டிச் சாய்த்திடுங்கள்.
காதல் ஆயுதத்தால்!

**-பெ.கிருட்டிணமூர்த்தி,**
**ஈரோடு**

# காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்தது–ஆர்.எஸ்.எஸ்.

*தமிழ்நாடு மாணவர் கழக சார்பில் "யார் தேச விரோதிகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் 5.2.2017 அன்று மாலை நடைபெற்றது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து. (சென்ற இதழ் தொடர்ச்சி)*

தேச விரோதிகள், அரசியல் சட்டத்தை மதிக்காதவர்கள் என்று கூக்குரல் போடுவோர், எத்தகைய 'தேசபக்தர்கள்'? நாம் கேட்பது, "நீங்கள் கூறும் தேசபக்தியின் அளவுகோலை உங்களுக்கே பொருத்திப் பாருங்கள்" என்பது தான். சட்டங்களையோ, அரசு அமைப்பையோ விமர்சித்துப் பேசுவதே 'தேசவிரோதம்' என்றால், சங்பரிவாரங்களே! உங்களின் வரலாறு என்ன என்பதுதான் நமது கேள்வி!

இந்திய அரசியல் சட்டம் குறித்து 1993ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி ஆர்.எஸ்.எஸ். ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. அந்த வெள்ளை அறிக்கை இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் இந்துக்களுக்கு எதிரானது என்று கூறுகிறது. இவர்கள்தான், இப்போது அம்பேத்கரையும் தங்கள் 'இந்துத்துவ' அணியில் இழுத்துக் கொண்டு தலித் மக்களை ஏமாற்றலாம் என்று கனவு கண்டு கொண்டிருக் கிறார்கள். அந்த அரசியல் சட்டம் குறித்த வெள்ளை அறிக்கையின் முன்னுரை இவ்வாறு கூறுகிறது (முன்னுரை எழுதியவர் சுவாமி ஹீரானந்த்):

**"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை முதலில் செயலிழக்கச் செய்ய வேண்டும். அதற்குப் பிறகுதான் நம்முடைய (இந்துக்களுடைய) பொருளாதாரக் கொள்கை நீதித் துறை மற்றும் நிர்வாக அமைப்புள்ள மற்ற தேசிய நிறுவனங்கள் ஆகியவை குறித்த மறு சிந்தனையில் ஈடுபட வேண்டும். அதனை (அரசிய லமைப்புச் சட்டத்தை) முழுமையாக ஒதுக்கித் தள்ளுவதற்கே முன்னுரிமை தரப்படவேண்டும். இந்த அரசியல் அமைப்புச் சட்டம் விளைவித்த தீங்கு களுடன் ஒப்பிடும்போது 200 ஆண்டு பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுத்திய சேதாரங்கள் மிகவும் குறைவானதே. பாரதத்தை இந்தியாவாக மாற்றுவதற்கான சதி தொடர்கிறது."**

**(ஆதாரம்: ஏ.ஜி. நூரானியின் 'ஆர்.எஸ்.எஸ்.சும், பா.ஜ.க.வும்' நூல்)**

இதுதான் அரசியல் சட்டம் குறித்த ஆர்.எஸ்.எஸ். பார்வை. பிரிட்டிஷ் ஆட்சி கொடுமையைவிட மிகவும் கொடுமையானது அரசியல் சட்டம் என்று கூறுவதற்கு இவர்களுக்கு உரிமை இருக்கும்போது அந்த அரசியல் சட்டத்தை விமர்சிக்கும் உரிமை மற்றவர்களுக்கு கிடையாதா?

1942ஆம் ஆண்டு, காந்தி 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை அறிவித்தபோது, ஆர்.எஸ்.எஸ். தேசபக்தர்கள் அந்த இயக்கத்தை ஆதரித்தார்களா? எதிர்த்தார்களா? 'தேசபக்த திலகங்கள்' பதில் சொல்ல வேண்டும். அந்த இயக்கத்தையும் காந்தியையும் எதிர்த்து பிரிட்டிஷ் ஆட்சிக்கு துணை நின்றது ஆர்.எஸ்.எஸ். மறுக்க முடியுமா? காங்கிரஸ் வரலாற்றை எழுதியுள்ள பட்டாபி சீத்தா ராமையா, தனது நூலில் இது குறித்து பல்வேறு செய்திகளை பதிவு செய்துள்ளார். இந்த 'தேச பக்தர்களின்' முகத்திரையை கிழித்து தொங்க விட்டிருக்கின்றது, அந்த வரலாறு. அவற்றை இவ்வாறு பட்டியலிடலாம்.

- காந்தி கைது செய்யப்பட்ட அதே நாளில் "காங்கிரஸ் கட்சியின் பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு காட்ட வேண்டாம்" என்று சாவர்க்கர் (சங்பரிவாரங்களின் முன்னோடி இவர்தான்) இந்துக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
- அரசுப் பணிகளில் இருக்கும் 'இந்துக்கள்' காந்தியின் இயக்கத்தை ஆதரித்து பதவி விலகாமல் தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டும் என்று இந்து மகாசபையின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது.
- இந்து மகாசபையின் கதை இது என்றால் ஆர்.எஸ்.எஸ். கதை என்ன? காந்தியின் இயக்கத்தால் ஆர்.எஸ்.எஸ். தடை செய்யப் பட்டு விடக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல்வாக்கர் அஞ்சினார். இராணுவத்தைப் போன்ற உடற்பயிற்சி களுக்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது. உடனே ஆர்.எஸ்.எஸ். நடத்தி வந்த உடற்பயிற்சியை நிறுத்திக் கொண்டது. அரசு சார்பற்ற அமைப்புகளைச் சார்ந்தவர்கள் சீருடை எதையும் அணியக் கூடாது என்று பிரிட்டிஷ் ஆட்சி தடை விதித்தவுடன் ஆர்.எஸ்.எஸ். சீருடை அணிவதை நிறுத்தி விட்டது. இராணுவ அணி வகுப்புப் பயிற்சி களை நிறுத்தி விட்டதாக ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் அறிவித்தார்.
- கோல்வாக்கர் ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான சட்டமறுப்பு இயக்கத்தை ஏற்காமல் சட்டத்துக்கு உடன்பட்டு நிற்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இது தற்காலிகமான ஒரு நடவடிக்கை என்கிற, சங்பரிவாரங்கள் நியாயம் கற்பிக்கின்றன. கோல்வாக்கர் சுற்றறிக்கை இதையும் தெளிவு படுத்துகிறது. "சட்டத்துக்கு கீழ் பணிந்து நடக்கும் எந்த அமைப்பும் இப்படித்தான் செயல்பட வேண்டும்.

**'இது தற்காலிகமான நிறுத்தம்; சூழ்நிலைகள் விரைவில் மாறும்' என்று கூட நாம் கூறலாம். ஆனால் நாம் அப்படி கூறத் தயாராக இல்லை; நாம் நமது பயிற்சிகளை சீருடை அணி வகுப்பை முழுமையாக நிறுத்தி விட்டோம். காலம் மாறும் என்று நாம் காத்திருக்கப் போவது இல்லை. பயிற்சிகள் தொடர்பாக நமது அமைப்பின் தனிப் பிரிவையே கலைத்து விட்டோம் என்று கூறுகிறது கோல் வாக்கரின் சுற்றறிக்கை..** (ஆதாரம்: வால்டர் கே. ஆன்டர்சன் - ஸ்ரீதர் டி. டாம்ப்லே இணைந்து எழுதிய ஆய்வு நூல் "The Brotherhood in Saffron")

- 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' பற்றி பம்பாய் மாநில உள்துறை நிர்வாக அறிக்கை இவ்வாறு கூறியது: "குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். 1942இல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு இயக்க'ங்களில் நடந்த கலவரங்களில் பங்கேற்கவில்லை" என்று கூறியது. பிரிட்டிஷ் ஆட்சியிடம் ஆர்.எஸ்.எஸ். பெற்ற நன்னடத்தை சான்றிதழ் இது. இதுதான் அவாளின் தேசபக்தி.
- அது மட்டுமா? 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' நடந்தபோது வங்காளத்தில் நடந்த மாகாண ஆட்சிக்கு தலைவர் (அப்போது பிரதமர் என்ற பெயர் - முதல்வர் அல்ல) முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த பஸ்லுல்ஹக். (குறிப்பு: பிரிட்டிஷ் ஆட்சி 1935இல் இந்தியாவுக்காக ஒரு சட்டத்தை உருவாக்கி, அதனடிப்படையில் இந்தியாவில் மாகாணங்கள் தேர்தல் நடத்தி ஆட்சி அமைக்கும் உரிமையை வழங்கியிருந்தது) முஸ்லிம் தலைமையிலான வங்காள அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர் சியாம் பிரசாத் முகர்ஜி எனும் வங்காள பார்ப்பனர். 'ஜன சங்கம்' என்ற ஆர்.எஸ்.எஸ்.சின் அரசியல் கட்சியை நிறுவியவர் இவர்தான். ஆர்எஸ்.எஸ் 'குடும்பத்தின்' வழி காட்டும் தலைவராக ஏற்கப்பட்டவர். காந்தி - ஒத்துழையாமை இயக்கத்தை அறிவிப்பதற்கு 10 நாட்கள் முன்பே மாகாண கவர்னருக்கு முகர்ஜி ஒரு கடிதம் எழுதினார். அதில், **"இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக நடக்கும் கிளர்ச்சிகளை மாகாண அரசாங்கம் எதிர்த்தாக வேண்டும்"** என்று பிரிட்டிஷ் கவர்னருக்கு கடிதம் எழுதி ஆலோசனை கூறினார்.

சர். ஜான் ஹெட்பாட் என்பவர் அப்போது இந்த மாகாணத்தின் ஆளுநராக இருந்தார். இரும்புக் கரம் கொண்டு இயக்கங்களை அடக்குபவர் என்று பெயர் பெற்றவர், இந்த ஆளுநர். அதன்படி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினர் மீது வங்காளத்தில் மிருகத்தனமான அடக்குமுறை ஏவி விடப்பட்டது. ஒத்துழையாமை இயக்கத் துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்பதை யும் தாண்டி, அதை எதிர்த்தார்கள். அமைச்சர்களாக உட்கார்ந்து கொண்டு பிரிட்டிஷ் கவர்னருக்கு அடக்குமுறைகளை ஏவிவிட ஆலோசனை வழங்கியவர்கள் இவர்கள்!

மெரினா கடற்கரையில் 'தேச விரோதிகள்' ஊடுருவி விட்டார்கள் என்று மிரட்டிப் பார்க்கும் தேசபக்த கொழுந்துகளே! உங்கள் தேசபக்தியின் கதையை திருப்பிப் பாருங்கள்! இந்த வரலாறு யாருக்குத் தெரியப் போகிறது என்று நினைத்து விட்டார்கள் போலும்! சரி முன்னாள் பிரதமர் வாஜ்பாய் கதை என்ன?

- ம.பி. மாநிலத்தில் படேஸ்வர் எனுமிடத்தில் 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' தொடர்பாக கலவரத்தில் ஈடுபட்டதாக வாஜ்பாய் அவரது சகோதரர் பிரேம் பிகார் லால் பாஜ்பாய் உள்ளிட்ட சிலரும் கைது செய்யப்பட்டனர். அப்போது இந்த கலவரத் தில் பங்கேற்று கைது செய்யப்படாமலிருந் தவர்களின் பெயர்ப் பட்டியலை காவல் துறையிடம் ஒப்படைத்து அவர்களைக் காட்டிக் கொடுத்து மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்து விடுதலையானவர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய். இந்த மன்னிப்பு கடிதத்தையே ஆவணக் காப்பகத்தி லிருந்து தேடிப் பிடித்து 'பிரன்ட் லைன்' பத்திரிகை வெளியிட்டது; மறுக்க முடியுமா?

தேச பக்திக்கு 'குத்தகைப் பாத்தியதை' கொண்டாடும் இவர்களின் கதையை ஏராள மாகப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

(தொடரும்)

# ஆத்தூரில் கழகம் ஆர்ப்பாட்டம்

*06.01.2017 திங்கள்கிழமை மாலை 5.00 மணியளவில், ஆத்தூர் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் சிறுகடம்பூர் பகுதியை சேர்ந்த தலித் சிறுமி 'நந்தினி'யை இந்துமுன்னணி கழிசடைகளால் மிகவும் கொடூரமாக பாலியல் வன்கொடுமை செய்யப் பட்டதைக் கண்டித்து, ஆத்தூர் திராவிடர் விடுதலைக் கழகம் ந.மகேந்திரன் தலைமையில் நீதி கேட்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.*





*இதனைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் இராமர், சபரிநாதன், ஆகியோர் கலந்து கொண்டு நந்தினி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை விளக்கி கண்டன உரையாற்றினர்.*

*பிடல்சேகுவேரா ராசிபுரம் பகுதியில் இருந்து வந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார். சிறுபான்மை அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டு முழக்கங்கள் எழுப்பினர். இறுதியாக ஆத்தூர் தி.வி.க பொறுப்பாளர் கணபதி கூறினார்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776


## வெளி வந்துவிட்டது!
## ‘நிமிர்வோம்’ பிப்ரவரி இதழ்

- பெரியார் கொள்கைகளை
  வளர்த்தெடுக்க வேண்டும்
  – பேராசிரியர் நன்னன் அவர்களுடன் நேர்காணல்
- போர்க்குற்ற விசாரணையிலிருந்து
  தப்பிக்க இலங்கையின் சதி.
  – பூங்குழலி
- ‘டிரம்ப்பின்’ இந்துத்துவம்.
- உலகையே கூறுபோடும்
  அக்கிரகாரங்கள்.
  – சுப. உதயகுமார்
- நூற்றாண்டுகாணும் எம்.ஜி.ஆர் :
  நிறையும் குறையும்
- பஞ்சாங்கம் அறிவியலா ?
  – புரட்சிகர விஞ்ஞானி
  மேக்நாத் சாகா தந்த பரிந்துரை




மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி,
95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை – 600 004.
தொலைபேசி எண் : 044 24980745 / 7299230363
www.dvkperiyar.com / nimirvomdvk@gmail.com


## தோழர்களுக்கு வேண்டுகோள்!

கழகத்தின் மாத இதழான ‘நிமிர்வோம்’ இரண்டாவது இதழ் (பிப்ரவரி) வெளி வந்து விட்டது.

இதழுக்கான பதிவு – அஞ்சல் கட்டணச் சலுகைகளுக்காக செய்யப்பட வேண்டிய பணிகள் நடந்து வருகின்றன. அஞ்சல் கட்டண சலுகைக்கான அனுமதி கிடைப்பதற்கு சில மாதங்கள் ஆகக்கூடும். இப்போது ஓர் இதழை அஞ்சல் வழியாக அனுப்பிட முத்திரைக் கட்டணமாக ரூ.8 செலுத்த வேண்டும். நடைமுறையில் இது இதழ் தயாரிப்புக்கான செலவுகளை சுமையாக்கி விடும்.

எனவே, கழகத் தோழர்கள், பொறுப்பாளர்கள் அதிக எண்ணிக்கையில் இதழ்களைப் பெற்று மக்களிடம் கொண்டு சேர்க்கும் தேவை இருக்கிறது.

எனவே தோழர்கள், கூடுதல் எண்ணிக்கையில் இதழ்களைப் பெற்று விற்பனை செய்ய தலைமைக் கழக முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**– நிர்வாகி, ‘நிமிர்வோம்’**

## தமிழ்நாடு மாணவர் கழகம் நடத்திய கருத்தரங்கம்

*தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட “யார் தேச விரோதிகள்” கருத்தரங்கம் 5/2/2017 சென்னை மயிலாப்பூர் சிட்டி சென்டர் அருகே உள்ள கழக தலைமை அலுவலகத்தில் மாலை 5.45 மணிக்கு துவங்கியது. தமிழ்நாடு மாணவர் கழக சென்னை மாவட்ட அமைப்பாளர் ஜெயப்பிரகாசு தலைமை தாங்கினார். தேன்ராஜ் வரவேற்புரையாற்றினார். விவேக் முன்னிலை வகித்தார். கருத்தரங்கில் பல்வேறு மாணவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பேசினர்.*

*கருத்துரை வழங்கிய தோழர்கள் :- பாரி சிவக்குமார் (அமைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்), அன்பழகன் (‘தேசத்தின் குரல்’ பத்திரிகை), மணி (தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு), இராமசாமி (அகில இந்திய மாணவர் பெருமன்றம்), வீ. மாரியப்பன் (மாநில தலைவர், இந்திய மாணவர் சங்கம்), அப்துல், சிவா ஆகியோர் பேசினர் .*

*சென்னை பல்கலைக் கழகப் பேராசிரியர் இராமு மணிவண்ணண் பேசியதை அடுத்து, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், சுமார் 1.30 மணி நேரம் உரையாற்றினர். அருண் நன்றியுரை கூற நிகழ்ச்சி 9 மணிக்கு நிறைவு பெற்றது. நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட கழகத் தோழர்களும் கலந்துகொண்டனர்.*

# பெண்களின் உரிமைகளை மறுக்கும் ‘நாகா’ பண்பாடு

***பெண்களுக்கு அரசியல் உரிமை வழங்குவதையே பண்பாட்டின் அடிப்படையில் நாகாலாந்தில் எதிர்க்கிறார்கள். பழம் பெருமை பண்பாடு என்பதற்காக கண்மூடித்தனமாக ஏற்பது சமூகத்தையே சீரழித்து விடும் என்பதற்கு நாகாலாந்து கலவரமே உதாரணம்.***

*ஒரு வார காலம், கிளர்ச்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டு இருந்தது - இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான நாகாலாந்து.*

*பிப்ரவரி 1 அன்று நடைபெறுவதாக இருந்த, தற்போது இரத்து செய்யப்பட்டு விட்ட, நகராட்சி மன்றத் தேர்தல்கள்தாம் கலவரத்துக்குக் காரணம். இவ்வமைப்புகளில் மகளிருக்கு 33% ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனை எதிர்த்துத்தான் இத்தனை களேபரமும். மற்ற மாநிலங்களில் உள்ளது போலவே தங்கள் மாநிலத்திலும், மகளிருக்குத் தனி ஒதுக்கீடு வேண்டும் என்று, நாகாலாந்து அன்னையர் சங்கம், நீதிமன்றம் சென்று வாதிட்டது.*

*2012இல் இருந்து 2016 வரை நான்கு ஆண்டுகள் போராடியதன் பலன் - இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உச்சநீதிமன்றம், மகளிருக்கு 33% ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், 16 ஆண்டு களுக்குப் பின், நாகாலாந்து மாநிலத்தில், நகராட்சி அமைப்புகளுக்கு பிப்ரவரி 1 அன்று தேர்தல்கள் நடைபெற இருந்தன.*

*நாகாலாந்து மாநில பழங்குடியினர் கூட்டு இயக்கம், இந்த ஒதுக்கீட்டைக் கடுமையாக எதிர்த்து வருகிறது .மகளிருக்கு அதிகாரம் வழங்குவது, நாகர் இனத்தில் இல்லை என்பது அவர்களின் வாதம். நாகர் இனத்தின் தனித்தன்மையைக் குலைக்கிற செயலாக இதனை, கூட்டியக்கம் பார்க்கிறது. இதுதான் கிளர்ச்சி, கலவரம், துப்பாக்கிச் சூடு, இரு இளைஞர்கள் மரணம் என்று நீண்டுகொண்டே போகிறது.*

*கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையை ஏற்று, தேர்தல்கள் தற்போதைக்கு இரத்து செய்யப்பட்டு விட்டன; துப்பாக்கிச் சூடு நடத்திய காவலர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும், போராட்டத்தை இரத்து செய்கிற மனநிலையில், கூட்டு இயக்கம் இல்லை. முதல்வர் ஜீலியாங் பதவி விலக வேண்டும்; அதுவரை போராட்டம் தொடரும் என்று அறிவித்துள்ளனர்.*

*நைடோனு அங்காமி. சிறந்த சமூக சேவைக்காக 2000ஆம் ஆண்டு, பத்மஸ்ரீ விருது பெற்ற பெண்மணி. அதே ஆண்டு, நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்ட நபர்களில் ஒருவர். தனது ஆறாவது வயதில், கிளர்ச்சியாளர்களின் வன்முறையில், அரசுப் பணியில் இருந்த தனது தந்தையைப் பறி கொடுத்தவர்.*

*தாயாரால் வளர்க்கப்பட்டு, படித்து, காவல்துறை உதவி ஆய்வாளர் பணியில் சேர்ந்தார். சமூக சேவையில் ஈடுபாடு கொண்டு, இப்பதவியை உதறி விட்டு, பள்ளி ஆசிரியர் ஆனார்.*

*1984-ம் ஆண்டு, ‘நாகாலாந்து அன்னையர் சங்கம்’ தோற்றுவித்த நைடோனு, மது, போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிரமாகப் போராடி, போதையின் கோரப் பிடியில் இருந்து, தம் இன மக்களை விடுவிப்பதில் பெரும் வெற்றி கண்டார்.*

*இதனைத் தொடர்ந்து, ‘உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு பிரதிநிதித்துவம்’ என்கிற கோட்பாட்டில் முனைந்து இறங்கிய அன்னையர் சங்கம், நீதிமன்றக் கதவுகளை நாடியது.*

*நாகாலாந்து மக்களின் பாரம்பரிய மரபுசார் வழிமுறைகளுக்கு மதிப்பு அளிக்கிற வகையில், சாசனத்தின் பிரிவு 371ஏ, இம்மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கியது. இதன்படி, நாகாலாந்து மக்களின் பாரம்பரியம் தொடர்புடைய எந்தச் சட்டமும், நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டாலும் கூட, மாநில சட்டப் பேரவையும் அங்கீகரிக்க வேண்டும்.*

*நகராட்சி அமைப்புகளில் மகளிருக்கான ஒதுக்கீடு, தங்களின் பாரம்பரிய மரபுப்படி, ஏற்றுக்கொள்ள முடியாதது என்று, பழங்குடியினர் கூட்டு இயக்கம் கூறுகிறது. தங்கள் மாநில அரசு தங்களை வஞ்சித்து விட்டதாகவும், பிரிவு 371ஏ வழங்கிய சிறப்பு அந்தஸ்துக்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு அமைந்து இருப்பதாகவும் இவர்கள் கருதுகிறார்கள்.*

*நாகாலாந்து மாநில அமைச்சரவை கூடி, நகராட்சிகளுக்கு அதிகாரம் வழங்குதல் தொடர்பான அரசியல் சாசனப் பிரிவு 9ஏ-வில் இருந்து நாகாலாந்து மாநிலத்துக்கு விலக்கு அளிக்குமாறு, மத்திய அரசை வலி யுறுத்தி இருக்கிறது. இது தொடர்பாக, மொத்தம் உள்ள சட்டசபை உறுப்பினர்கள் 60 பேரும், டெல்லியில் பிரதமரை சந்தித்து, உடனடியாக அவசர சட்டம் பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்க உள்ளனர்.*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 16th Feburary 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN